

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி பெருந்தெரு பகுதியில் பள்ளி மாணவர் தாக்கப்பட்ட சம்பவத்தில் அதிர்ச்சியில் மாணவரின் தாத்தா கிருஷ்ணன் உயிரிழந்தார். அன்னாரது வீட்டிற்கு நேரில் சென்று முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ. 3 இலட்சத்திற்கான காசோலையினை அன்னாரது குடும்பத்தினரிடம் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர்.மனோகரன், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன் ஆகியோர் முன்னிலையில் வழங்கி ஆறுதல் கூறினார்கள்.



தென்காசி மாவட்டம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் நேற்று முன்தினம் (13.08.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண் அறுவை அரங்கம் மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு பிரிவின் உள்வசதிகளை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் துரை. இரவிச்சந்திரன் , தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ்.எம்.குமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனி நாடார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

### தி.மு.கழக சட்டத்துறை சார்பில் – கோவை வழக்கறிஞர் சங்கத்தில்

# இளம் வழக்கறிஞர்களை உறுப்பினர் சேர்த்தல்! வழக்கறிஞர் சேமநல நிதி!

## என்.ஆர்.இளங்கோ எம்.பி.வழங்கினார் !

கோவை, ஆக.15-

தி.மு.கழக சட்டத்துறை சார்பில் கோவையில் இளம் வழக்கறிஞர்களை சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்த்தல் மற்றும் வழக்கறிஞர் சேமநல நிதி அளித்திடும் விழா நடைபெற்றது.இதில் தி.மு.கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. பங்கேற்றார்.

தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் விதமாக கோயம்புத்தூர் வழக்கறிஞர் சங்கத்தில் இதுவரை உறுப்பினராகாமல் உள்ள நூறு வழக்கறிஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உறுப்பினர் சேர்க்கை கட்டணம் மற்றும் அவர்களுக்கான சேம நல நிதி கட்டணம் ஆகியவற்றை செலுத்தியும் அவர்களுக்கான சட்ட வகுப்புகளை தொடங்கும் நிகழ்ச்சி நேற்று (14.8.2023) மாலை 3 மணி அளவில் அவிநாசி சாலை,தி கிராண்ட் ரிஜென்ட் ஹோட்டல் கோயம்புத்தூரில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கழகத்தின் சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம் பி. கலந்துகொண்டு உறுப்பினர் சேர்க்கை கட்டணம் மற்றும் சேம நல நிதி ஆகியவற்றிற்கான காசோலையை கோயம்புத்தூர் வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகளிடம் வழங்கினார்.

மேலும் குற்றவியல் சட்டம் ஓர் அறிமுகம் என்னும் தலைப்பில் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்ட பயிற்சி வகுப்பும் எடுக்கப் பட்டது

இந்நிகழ்ச்சியை கோவை மாவட்ட முதன்மை அரசு வழக்கறிஞர் வ.அருள்குமார் ஒருங்கிணைத்தார்.

### மணிப்பூர் இனக்கலவரத்திற்கு ஒன்றிய அரசு தீர்வு காண வலியுறுத்தி

# கர்நாடக மாநில தி.மு.க. இளைஞரணியினர் தர்ணா போராட்டம்!

## பெங்களூருவில் நடைபெற்றது!

பெங்களூரு, ஆக. 15-

மணிப்பூர் மாநிலத்தில் நடந்து வரும் இன கலவரத்தை தடுக்காமல் இருக்கும் ஒன்றிய அரசை கண்டித்து கர்நாடக மாநில தி.மு.க. இளைஞரணியினர் பெங்களூருவில் தர்ணா போராட்டம் நடத்தினர்.

நாட்டின் வடகிழக்கு பகுதியில் உள்ள மணிப்பூர் மாநிலத்தில் கடந்த மூன்று மாதங்களாக நடந்து வரும் இன கலவரத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். ஆயிரக் கணக்கானோர் பல வழிகளில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இது மிக பெரிய மனித உரிமை மீறல் செயலாக இருந்தும் மணிப்பூரில் அமைதி நிலை நாட்டும் முயற்சியை மணிப்பூர் மாநில பா.ஜ. அரசு மற்றும் ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ. அரசு மேற்கொள்ளாமல் அலட்சியம் காட்டி வருகிறது.

மணிப்பூர் மாநில இன கலவர விஷயத்தில் மவுனமாக இருக்கும் மணிப்பூர் மாநிலம் மற்றும் ஒன்றிய அரசுகளை கண்டித்தும் மணிப்பூர் மாநிலத்தில் அமைதி நிலைநாட்டி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் ஏற்படுத்தி கொடுக்க வலியுறுத்தி கர்நாடக மாநில தி.மு.க. இளைஞரணி சார்பில் நேற்று காலை 11 மணிக்கு பெங்களூரு சுதந்திர பூங்காவில் போராட்டம் நடத்தினர். மாநில தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் டி. சிவமலை தலைமையில் நடந்த போராட்டத்தில் கர்நாடக மாநில தி.மு.க. அவைத்தலைவர் மொ. பெரியசாமி, மாநில பொருளாளர் கே. தட்சணாமூர்த்தி, மாநில இளைஞரணி துணை அமைப்பாளர்கள் என். விக்ரம், அ. லியோராஜன், மாநில தி.மு.க. முன்னாள் பொறுப்பு குழு உறுப்பினர் ஏ.டி.ஆனந்தராஜ், பெங்களூரு 96வது வட்ட செயலாளர் செ. தமிழ்ச்செல்வன், துணை செயலாளர் எஸ். ஏழுமலை, 95வது வார்டு நிர்வாகி லோகநாதன், தொ.மு.ச. நிர்வாகி சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மாவட்டம் – பட்டாபிராம், இந்து கல்லூரியில் தனியார் வேலைவாய்ப்பு முகாம்!

# தேர்வு செய்யப்பட்ட 1491 பேருக்கு பணி ஆணைகள்!

## அமைச்சர்கள் ஆர்.காந்தி – சி.வெ.கணேசன் வழங்கினர்! ஆவடி சா.மு.நாசர் முன்னிலை!

திருவள்ளூர், ஆக.15-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, பட்டாபிராம், இந்து கல்லூரியில் 12.08.2023 அன்று நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 151 நிறுவனங்கள் பங்கு பெற்று தங்கள் நிறு வனத்தில் உள்ள காலி பணியிடங்களுக்கான நபர்களை தேர்வு செய்யும் பொருட்டு நடத்தப்பட்ட பல்வேறு தேர்வு முறைகளில் தேர்ச்சி பெற்று தேர்வுசெய்யப்பட்ட 1491 நபர்களுக்குகைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் பணி ஆணைகளை முன்னாள் அமைச்சர்/ ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சா.மு.நாசர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் ஆகியோர் முன்னிலையில் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

தேர்வு செய்யப்பட்ட 1491 நபர்களில் ஆண்கள் 138 நபர்களும், பெண்கள் 69 நபர்களும், 6 மாற்றுத்திறனாளிகள் உட்பட 213 நபர்களுக்கு நேரடி பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இதர 1278 நபர்கள் இரண்டாம் கட்ட தேர்வுக்காக தேர்வு செய்யப்பட்டு இரண்டாம் கட்ட தேர்வுக்கு அழைக்கப் பட்டுள்ளனர்.

முன்னதாக, ஆவடி மாநகராட்சி, பட்டாபிராம் இந்து கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் ஆகியோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, இம்மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அதனை தொடர்ந்து, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுத்தரும் வகையில் 100 வேலை வாய்ப்பு முகாம்களை நடத்துமாறுதமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டார்கள். தமிழ்நாடு முழுவதும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை வாயிலாக வேலை வாய்ப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது. இன்று தமிழ்நாடு முழுவதும் 9 இடங்களில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடைபெற்று வருகின்றன. தற்போது, திருவள்ளூர் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் வழிகாட்டு மையம் சார்பில்,ஆவடி இந்து கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுகிறது.

வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். முதல் வேலைவாய்ப்பு முகாமினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் கடந்த 22.7.2023 அன்று சென்னை,மாநிலக் கல்லூரியில் துவக்கி வைத்தார். இது வரை, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இதில், சுமார் 1.54 லட்சம் பேருக்கு தனியார் துறை மூலம் வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவை போற்றும் வகையில் வருகிற டிசம்பர் மாதத்திற்குள் 100 இடங்களில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடைபெற உள்ளது. இன்று நடைபெற்ற இந்த முகாமில் மொத்தம் 7300 நபர்கள் பங்கேற்றத்தில் 6 மாற்றுத்திறனாளிகள் உட்பட 213 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு 1278 பேர் இரண்டாம் கட்ட தேர்வுக்காக தேர்வு செய்யப் பட்டுள்ளனர். அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முகாமில் தேர்ச்சி பெறாதவர்களுக்கும் அடுத்த முறை பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்படும் அதனையும் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் நிச்சயம் நீங்கள் விரும்பும் ஊதியத்தில் உங்களுக்கான வேலை கிடைக்கும். உங்களுக்கான முயற்சி மட்டும் கைவிடாதீர்கள். தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் வெற்றி நிச்சயம்!

இவ்வாறு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, இம்மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்ட 1000 நபர்களுக்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சார்பாக பிளாஸ்டிக் ஒழிப்பை வலியுறுத்தியும் சுற்றுச்சூழலை பாதுகாத்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் 1000 மஞ்சப்பைகளைகைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ,தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் ஆகியோர் முன்னாள் அமைச்சர்/ ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் முன்னிலை யில் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வுகளில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்ப்பகராஜ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் என்.ஒ.சுகபுத்ரா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய செயற்பொறியாளர் ரவிச்சந்திரன், வேலைவாய்ப்பு துறை மண்டல இணை இயக்குநர் திருமதி. ஆ.ஜோதிமணி, உதவி இயக்குநர் திருமதி. விஜயா, தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி.மலர்விழி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய உதவி பொறியாளர் சபரி, இந்து கல்லூரி முதல்வர் முனைவர்.ஜி.கல்விக்கரசி, உள்ளாட்சிப் பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் இன்று (15.8.2023 செவ்வாய்க் கிழமை) மாலை 4.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி “விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை” தமிழகம் முழுவதும் நடத்துவது – குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 600 018
நாள்– 13.8.2023

ஏ.கே.எஸ்.விஜயன்
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

### கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

# ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மாணவர் அணி பொறுப்புக்கான விண்ணப்பங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!



கடலூர், ஆக. 15-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய பகுதிகளுக்கு அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என்று வேளாண்மை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அறிவிப்பின்படி, கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மாணவர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். இதில் ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவர். துணை அமைப்பாளர்களில் ஒருவர் ஆதிதிராவிடர் / பழங்குடியினத்தைச் சேர்ந்தவராகவும் மற்றும் பெண் துணை அமைப்பாளர் ஒருவரும் இருப்பது அவசியம். ஒரு துணை அமைப்பாளர் தற்போது கல்லூரியில் பயிலக்கூடிய மாணவராக இருத்தல் அவசியம். நியமிக்கப்படவுள்ள நிர்வாகி கள் அனைவரும் கல்லூரி / டிப்ளமோ படிப்பைமுடித்தவராகவோ அல்லது தற்போது கல்லூரியில் பயிலக்கூடியவராகவோ இருத்தல் வேண்டும். இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிப் போர் கடலூர் கிழக்கு மாவட்ட அலுவலகத்திலோ அல்லது முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்தோ அல்லது வலைதள முகவரியி லிருந்தோ பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்க லாம். அதனை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் வருகின்ற 18.08.2023 வெள்ளிக்கிழமை அன்று மாலைக்குள் மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும். அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் அந்தந்த மாவட்டத்திலேயே மாணவர் அணி நிர்வாகிகளால் நடத்தப்படும். நேர்காணல் நடைபெறும் நாள், நேரம், இடம் பின்னர் தெரிவிக்கப்படும்.

குறிப்பு: ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் 30 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். கல்விச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, நகல் இணைக்கப்பட வேண்டும். பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படம் விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும். இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள் மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால் அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம். விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்துவிவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்ப வேண்டும்.

விண்ணப்பப் படிவம் பதிவிறக்கம் செய்ய: http://surl.li/mwoy

மேலும் தொடர்புக்கு:

முகநூல் http://www.facebook.com/EzhilarasanCVMP

டுவிட்டர் https://twitter.com/EzhilarasanCVMP

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

### விடுதலை திருநாள் விழா!

# இன்று (15.8.2023) சரியாக காலை 8 மணிக்கு அண்ணா அறிவாலயத்தில் தேசியக் கொடி ஏற்றப்படுகிறது!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

இன்று (15.08.2023 – செவ்வாய்க்கிழமை) இந்திய நாட்டின் விடுதலை திருநாளினையொட்டி, கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் தி.மு.க. தலைமைக் கழகமான அண்ணா அறிவாலயத்தில் காலை சரியாக 8.00 மணிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தேசியக் கொடி ஏற்றி வைக்கிறார்.

சென்னை வடக்கு – சென்னை வடகிழக்கு – சென்னை கிழக்கு – சென்னை மேற்கு – சென்னை தென்மேற்கு – சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : 13.8.2023

தலைமைக் கழகம்,
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கம்மராசபுரம் கே.எம்.இராஜகோபால்

## ஆகஸ்ட் 15 (1980)



தனது 16வது வயதிலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து, தொடர்ந்து அண்ணாவின் தலைமையை ஏற்று கழகத்தில் தீவிரமாக பணியாற்றி தமிழகமெங்கும் சுற்றி மூடநம்பிக்கை எதிர்ப்பு பிரச்சாரம் செய்தவர்.

அண்ணாவின் ‘நீதிதேவன் மயக்கம்’ நாடகத்தில் இராவணன் வேடமேற்று நடித்தவர்.

உழவர் குத்தகை உரிமை – இந்தி எதிர்ப்பு – சட்ட எரிப்பு – விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் களம் புகுந்து சிறை சென்றவர்.

1965ல் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் – 1976ல் மிசா சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் – கம்மராசபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக மறையும் வரை தொடர்ந்து பொறுப்பில் இருந்தவர்.

காஞ்சிபுரம் வட்டக் கிளைச் செயலாளர் – செங்கல்பட்டு மாவட்ட செயற்குழு உறுப்பினர் – தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.